**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 46/2023**

**Date :23.03.2026**

**வா.சா. 1 -ஜஸ்டஸ் ராஜன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் இவ்வழக்கில் ஏ பரிகாரமாக பாரிஸ் பங்கு பேரவையினுடைய 20 பேர் கொண்ட கமிட்டி வாதியினுடைய சர்ச்சில் நிர்வாகத்தினை நடத்திட விளம்புகை கேட்டுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 1ல் பங்கு பேரவையின் விதிமுறைகள் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 1 பங்கு பேரவை விதிமுறைகள் செல்லாது மற்றும் அதனை ரத்து செய்ய வேண்டுமென்று எவ்வித பரிகாரமும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான்.

நான் இவ்வழக்கில் பி பரிகாரமாக சிறிய புஷ்பம், ஜெயலஸ் மற்றும் இருதய ராஜ் ஆகியோர்கள் கமிட்டி உறுப்பினர்களாக பாரிஸ் பங்கு பேரவையின் சட்ட விதிமுறைகளுக்கு எதிராக பரிந்துரைக்கப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான் . மேற்படி நபர்களை நான் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

28.08.2022 அன்று பாரிஸ் பங்கு பேரவையில் தேர்தல் நடந்ததாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தேர்தலில் தான் மேற்படி சிறிய புஷ்பம், ஜெயலஸ் மற்றும் இருதய ராஜ் ஆகிய 3 நபர்களும் பரிந்துரைக்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல. அதற்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை. மேற்படி 3 நபர்கள் 20 பேர் கொண்ட கமிட்டியில் பங்கு பெற கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 20 பேர் கொண்ட கமிட்டியிலோ அல்லது மேற்படி பரிந்துரைக்கப்பட்ட 3

நபர்களிடமிருந்தோ இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு ஏதேனும் எழுத்துமூல அதிகாரம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். மேற்படி அதிகாரம் பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் வரிக்காரர்கள் மொத்தம் 700 பேர் என்று குறிப்பிட்டுள்ளேன் அவர்களின் பெயர் பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

கட்டளை 1 விதி 8ன் கீழ் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 22.08.2022 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பதிவி காலம் 3 ஆண்டுகள் என்றால் சரியல்ல. 5 ஆண்டுகள் வரை இருக்கலாம் அல்லது பங்கு பணியாளர்கள் மாற்றம் செய்யும் வரை பதவி காலம் நீடிக்கும். தற்போது 5 வருடம் முடிந்துவிட்டதா என்றால் இல்லை. அவ்வாறு பதவி காலம் 3 அல்லது 5 ஆண்டுகள் குறித்த சட்ட விதிமுறைகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எழுத்துமூலமாக இல்லை. 3 வருட பதவிக்காலம் முடிந்த பின்பு தற்போதைய துணைதலைவர் ஜாக்ஷ ன், பொருளாளர் மெர்லின் தேவ், பங்கு தந்தை சுதர்சன் ஆகியோர் பங்கெடுத்து வங்கியில் உள்ள கணக்கு வழக்குகளை பராமரித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தேர்தல் நடைபெறவில்லை. கடந்த 4 ஆண்டுகளாக எங்களிடம் பங்கு பேரவைக்கான அனைத்து விழாக்கள் மற்றும் இதர கணக்கு வழக்குகள் நாங்கள் பராமரிக்கவில்லை. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பராமரித்து வருகிறார்கள்.

கோவில் திருவிழா சம்மந்தமாக மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதன் உத்தரவு குறித்து வாசாஆ 4 மற்றும் வாசாஆ 5 நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 4 மற்றும் வாசாஆ 5 நடைமுறைக்கு வரக்கூடாது என்று நான் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு

தள்ளுபடி செய்யப்பட்டு அதன் மேல் நான் எவ்வித மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் தேவையில்லை. நாங்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தற்போது எங்களின் உரிமையை பாதுகாக்க கோரி நீதிப்போராணை மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சி பரிகாரமாக 1ம் பிரதிவாதியை 3 பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களை தவிர 11ம் பாரிஸ் பங்கு பேரவை, துணைத் தலைவர், பொருளாளர் மற்றும் கணக்காளரை அங்கிகரிக்குமாறு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

பிஷப் மேலாக வழக்கு D மற்றும் E பரிகாரங்கள் கேட்பதற்கு எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சர்ச்-யை சார்ந்து வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வித தகுதியோ உரிமையோ கிடையாது என்றால் சரியல்ல. ஆகையால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**